# SUBORDINATE COURT, PADMANABHAPURAM
# CASE NO.SC.258/2017
# Deposition of P.W.5

Name : திரு. ஸ்ரீஹரி
S/o, D/o, W/o :
Caste :
Religion :
Village :
Taluk :
Calling :
Age :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated:06.10.2021**

**முதல் விசாரணை-**

நான் கல்நாட்டு விளையில் தாமசிக்கிறேன். நான் எலக்டீரிஷியனாக வேலை பார்க்கிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. இன்று நீதிமன்றத்திற்கு வராத எதிரி ஆல்பட் ஆகியோர்களை தெரியாது. வழக்கில் காயம்பட்ட அ.சா.1 ஐ தெரியும். வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது.

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதிக்க கோரி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை-</u>

என்னை போலீசார் விசாரித்த போது 23.8.2012 ம் தேதி இரவு சுமார் 222.30 மணி அளவில் சுவாமியார் மடம் சந்திப்பில் சாட்சிகள் சுஜின், பால்ராஜ், ராஜாசிங் ஆகியோர்களுடன் நின்று கொண்டிருக்கும் போது இந்தவ ழக்கில் காயம்பட்ட விஜீ, ஜஸ்டஸ், ராஜகுமார், சதீஷ்குமார் ஆகியோருடன் 3 ஸ்டார் லன்ஞ் கோம் கடையில் டிபன் சாப்பிட சென்று கொண்டிருக்கும் போது இந்த வழக்கில் உள்ள ஆல்பட் என்ற எதிரி அ.சா.1 ஐ பார்த்து என்னை போலீசில் காட்டி கொடுத்தவன் நீதானே அதனால் ரூபாய் 50,000 செலவானது என்றும் ஆகவே நீ உயிரோடு இருக்க கூடாது இதோடு தொலைந்து போ என்று சொல்லி கையில் இருந்த வெட்டு கத்தியை எடுத்து ஓங்கி வெட்டும் போது சாட்சி விஜீ தடுத்து விடவே வெட்டுகத்தி கீழே விழுந்தது என்றும், உடனே எதிரிகள் முருகனும்

ஆல்பட்டும் சாட்சி விஜீவை பிடித்து வைக்க எதிரி ராஜேஷ் என்பவரிடம் இவனை கொல்லுங்கடா என்று சொன்ன உடன் எதிரி ராஜேஷ் மேற்படி வெட்டுகத்தியுடன் விஜீவை பார்த்து இதோடு தொலைந்து போ என்று சொல்லி விஜீவின் தலையில் வெட்டினார் என்றும், அதன் பிறகு அவர் கழுத்தில் கிடந்த 2 பவுன் செயினை வழக்கு செலவுக்காக வேண்டி கொள்ளையடித்து சென்றதாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக இவ்வழக்கிற்கு உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-</u>

எதிரிகள் தரப்பில் சாட்சியிடம் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டது.